செ.வெ.எண். 05/நவம்பர் தேதி : 03.11.2016

## தருமபுரி மாவட்டம்

## உலக சிக்கன நாள் விழாவையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற தருமபுரி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவியர்களுக்கு பரிசு மற்றும் காசோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.





சென்னை தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொ) அவர்களின் ஆணைப்படியும், ஆலோசனைக் குழுத்தலைவரும் தருமபுரி மாவட்ட ஆட்சியருமான திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் 2016-17ஆம் ஆண்டுக்கான போட்டிகள் தருமபுரி அவ்வையார் அரசு மகளிர் மேனிலைப் பள்ளியில் நடைபெற்றது.

தருமபுரி மாவட்டத்தில் 11,12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவியர்களிடையே தமிழில் அவர்களுக்கிருக்கும் படைப்பாற்றலையும், பேச்சாற்றலையும் வளர்க்கும் நோக்கில் ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகத் தமிழில் கவிதை - கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் மாவட்ட அளவில் நடத்தி ஒவ்வொரு போட்டிக்கும் முதல்நிலைப் பரிசு ரூ.10000/-இம், இரண்டாம் பரிசு ரூ.7000/-இம், மூன்றாம் பரிசு ரூ.5000/-இம் வழங்குவதோடு, பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

## மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்களின் விவரம்

| போட்டியின் பெயர் | முதல் பரிசு ரூ.10000 | இரண்டாம் பரிசு ரூ.7000 | மூன்றாம் பரிசு ரூ.5000 |
|---|---|---|---|
| கவிதை | செல்வி. மு.கற்பகம்<br>12-ஆம் வகுப்பு,<br>கணித அறிவியல் அரசு மகளிர் மேனிலைப் பள்ளி, மாரண்டஹள்ளி | செல்வி த.பிரவீணா<br>12-ஆம் வகுப்பு,<br>கணித உயிரியல்,<br>அரசு மேனிலைப் பள்ளி,<br>வெங்கட்டம்பட்டி,<br>தருமபுரி மாவட்டம். | செல்வி.ஜ. ஜமுனா<br>12-ஆம் வகுப்பு,<br>கணித உயிரியல்,<br>அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,<br>அதியமான்கோட்டை,<br>தருமபுரி மாவட்டம். |
| கட்டுரை | செல்வி. ர.வேதஸ்ரீ<br>12-ஆம் வகுப்பு,<br>கணித உயிரியல்,<br>அவ்வையார் அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,<br>தருமபுரி. | செல்வி. ச.சௌமியா<br>12-ஆம் வகுப்பு,<br>கணித உயிரியல்,<br>அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,<br>அதியமான்கோட்டை<br>தருமபுரி மாவட்டம். | செல்வி. இரா. கற்பகவல்லி<br>11-ஆம் வகுப்பு,<br>கணித உயிரியல்,<br>அரசு மேனிலைப் பள்ளி,<br>வெங்கட்டம்பட்டி,<br>தருமபுரி மாவட்டம். |
| பேச்சு | செல்வி. இர.ரஞ்சிதா<br>12-ஆம் வகுப்பு,<br>அறிவியல் பிரிவு,<br>அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,<br>மாரண்டஹள்ளி | செல்வி. கோ.நர்மதா<br>12-ஆம் வகுப்பு,<br>வரலாறு,<br>அவ்வையார் அரசு மகளிர் மேனிலைப் பள்ளி,<br>தருமபுரி. | செல்வி. இரா. நிஷா<br>12-ஆம் வகுப்பு,<br>வணிக கணினி,<br>அரசு மேனிலைப் பள்ளி,<br>வெங்கட்டம்பட்டி,<br>தருமபுரி மாவட்டம். |

கவிதை, கட்டுரை, பேச்சு போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்ற முதல் பரிசுப் பெற்ற மாணவர்கள் சென்னையில் நடைபெறும் மாநில அளவிலானப்

போட்டிகளுக்கு அரசு செலவில் அனுப்பிவைக்கப்பெறுவர் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திரு.ரே. வெங்கடாசலம், மாவட்டக்கல்வி அலுவலர் திரு. சி.இராஜசேகர், முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு. கோவிந்தசாமி, புலவர் மு.பரமசிவம், தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர் திரு. ப.கோவிந்தராசு(பணிநிறைவு) மற்றும் அவ்வையார் அரசு மகளிர் மேனிலைப் பள்ளி தலைமையாசிரியர் திருமதி. கு.தெரசாள்உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.